**நகர்மன்றம்,**
**போடிநாயக்கனூர் ,நாள்.30.06.2022**

**2022ம் ஆண்டு ஜீன் மாதம் 30.06.2022ம் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்**

முன்னிலை :- திருமதி.ச.ராஜராஜேஸ்வரி,
நகர்மன்ற தலைவர்.

❖ **<u>பொருள் எண்–1 :</u>**

இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் மே 2022ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u> :** மன்றம் பதிவு செய்யலாம்

(ந.க.எண்.1103/2020/சி1)

**தீர்மான எண் : 63–** பதிவு செய்யப்பட்டது

❖ **<u>பொருள் எண்–2:</u>**

இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் மே 2022ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u> :** மன்றம் பதிவு செய்யலாம்

(ந.க.எண்.1103/2020/சி1)

**தீர்மான எண் : 64–** பதிவு செய்யப்பட்டது

❖ **<u>பொருள் எண்–3:</u>**

தேனி மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறை ஆணைகள் ந.க.எண்–ஜி3/35026/2015, நாள்–22.06.2022–ன் படி, தேனி மாவட்டம் ,போடிநாயக்கனூர் வட்டம் ,மதுரை–போடிநாயக்கனூர் ரயில்பாதை மற்றும் போடிநாயக்கனூர் ரயில்வே நிலையம் அமைப்பது தொடர்பாக ,போடிநாயக்கனூர் ரயில்வே நிலையப்பகுதியில் இருப்புப்பாதை சந்திக்கடவுக்கு பதிலாக கீழ்கண்ட நிபந்தனைகளுடன் ரயில்வே சுரங்கபாதை (Subway) அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>நிபந்தனைகள்</u>**

1.மேற்படி புலத்தில் வார்டு எண்2 –இல்,பிளாக் எண்30–இல்,நகர நில அளவை எண்4409–இல் பரப்பு 0.1969.0 ச.மீட்டர் மற்றும் நகர நில அளவை எண் 4416–இல் பரப்பு 0.4857.0 ச.மீட்டரும்,பிளாக் எண் 41–இல்,நகர நில அளவை எண் 4296/1–

இல் பரப்பு 0.4534.5 ச.மீட்டரும் தெரு புறம்போக்கு என நில வகைப்பாடு செய்யப்பட்டுள்ளதால்,அதற்குரிய நிலமதிப்பினை போடிநாயக்கனூர் நகராட்சி கோரும் பட்சத்தில் செலுத்த வேண்டும்.

2.சுரங்கபாதை அமைக்கும் பணிகளின் போது அருகில் வசிக்கும் பொதுமக்கள்/வீடுகளுக்கு இடையூறின்றி பணிகள் மேற்கொள்ள வேண்டும்.

3.சுரங்கபாதை அமைக்கப்படும் பொழுது அருகில் உள்ள பொது/ தனியார் நிலங்களுக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் பணிகள் மேற்கொள்ள வேண்டும். பாதிப்பு ஏற்படும் பட்சத்தில் முழுபொறுப்பும் இரயில்வே நிருவாகமே ஏற்க வேண்டும்.

4.மழைக்காலங்களில் சுரங்கபாதையில் மழைநீர் தேங்காவண்ணம் அதிக திறன் கொண்ட மின்மோட்டார்களை பொறுத்தி மழைநீரை வெளியேற்ற வேண்டும்.

5.சுரங்க பாதையில் 24* 7 மணி நேரமும் பொதுமக்கள் மற்றும் பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் இரயில்வே காவலர்கள் சுழற்சி முறையில் பணியமர்த்தப்பட வேண்டும்.

6.சுரங்கபாதையில் பாதுகாப்பு காரணங்களுக்காக தேவையான மின் விளக்குகள் அமைக்க வேண்டும்.

அலுவலகக் குறிப்பு:– மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண். 1623/2022/இ1)
**தீர்மான எண் : 65–** பதிவு செய்யப்பட்டது

❖ **<u>பொருள் எண்–4:</u>**

போடிநாயக்கனூர் நகராட்சியில் பொதுநிதியின் கீழ், கீழ்காணும் பணிக்கு 13.06.2022ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சியில் 100 மரக்கன்றுகளுக்கு மரத்தடுப்பு வேலி நிறுவும் பணி | ரூ.1,50,000/– | திரு. P.நடராஜன், ஒப்பந்தகாரர் , போடிநாயக்கனூர். | (-)0.40% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு. L.எல்லப்பன், ஒப்பந்தகாரர் , போடிநாயக்கனூர். | 0.40% மதிப்பீட்டை விட கூடுதல் |

**அலுவலகக்குறிப்பு** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட(-)**0.40%** குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு. P.நடராஜன், ஒப்பந்தகாரர், போடிநாயக்கனூர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொண்டு வேலை உத்தரவு வழங்கவும் மற்றும் பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1366/2022/இ1)

**தீர்மான எண் :** 66– அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ **<u>பொருள் எண்–5:</u>**

புதிய குடிநீர் திட்ட செயலாக்கத்திற்கு பரமசிவன் கோவில் நகராட்சி சுத்திகரிப்பு நிலையத்தில் அனுமதி பெற்று வெட்டப்பட்ட மரங்களை அப்புறப்படுத்த **26.05.2022**ம் தேதி விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனம் | விலைப்புள்ளி தொகை ரூ |
|---|---|---|
| 1 | ஜெயலட்சுமி டிம்பர்ஸ்,தேனி | 8,500/– |
| 2 | சிவா டிம்பர்ஸ்,போடிநாயக்கனூர் | 9,200/– |
| 3 | ஆண்டவர் தகரக்கடை, போடிநாயக்கனூர் | 9,500/– |

**அலுவலக குறிப்பு :**

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் அதிக விலைப்புள்ளி ரூ.**9,500/–**க்கு வழங்கிய ஆண்டவர் தகரக்கடை, போடிநாயக்கனூர் நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கவும், ரூ.**9,500/–** நகராட்சி கணக்கில் வரவு வைக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1215 /2022/இ1)

**தீர்மான எண் :** 67– அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ **<u>பொருள் எண்–6:</u>**

போடிநாயக்கனூர் நகராட்சியில் பொதுநிதியின் கீழ், நகர்மன்ற தீர்மான ஒப்புதலின் படி கீழ்காணும் பணிக்கு **31.05.2022**ம் தேதி ஒப்பந்தப்புள்ளி

கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சியில் வார்டு எண்– 3,12,30 மற்றும் 32 ஆகிய வார்டுகளில் பழுது ஏற்பட்டுள்ள Sulice Valve 4 எண்ணத்தை பழுது நீக்கம் செய்யும் பணி | ரூ.35,000/– | திரு. P.நடராஜன், ஒப்பந்தகாரர் , போடிநாயக்கனூர். | 33400/- |
| | | | திரு. L.எல்லப்பன், ஒப்பந்தகாரர் , போடிநாயக்கனூர். | 33000/- |

**அலுவலகக்குறிப்பு** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.L.எல்லப்பன், ஒப்பந்தகாரர், போடிநாயக்கனூர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொண்டு வேலை உத்தரவு வழங்கவும் மற்றும் பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1003/2022/இ1)

**தீர்மான எண் : 68–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ **<u>பொருள் எண்–7</u>**

போடிநாயக்கனூர் நகராட்சியில் பொதுநிதியின் கீழ், நகர்மன்ற தீர்மான ஒப்புதலின் படி கீழ்காணும் பணிக்கு 31.05.2022ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட நீர்வடி நிலையத்திற்க்கு | ரூ.50,000/– | M/s.Shri Satya Dyes and Chemicals Aundipatti | ரூ.49,840/– |

| | | | | |
|---|---|---|---|---|
| | **2022–23ம் ஆண்டிற்கு படிமான தொட்டிகள் சுத்தம் செய்ய பயன்படுத்தப்படும் ப்ளீச்சிங் பவுடர் 1 டன் விநியோகம் செய்யும் பணி** | | M/s.People Chemical Industries, Aundipatti | **ரூ.49,990/–** |

**அலுவலகக்குறிப்பு** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s.Shri Satya Dyes and Chemicals Aundipatti நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொண்டு வேலை உத்தரவு வழங்கவும் மற்றும் பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 1000/2022/இ1)**
**தீர்மான எண் : 69–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ **<u>பொருள் எண்–8</u>**

போடிநாயக்கனூர் நகராட்சியில் பொதுநிதியின் கீழ், நகர்மன்ற தீர்மான ஒப்புதலின் படி கீழ்காணும் பணிக்கு **31.05.2022**ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| **1** | **2022–23ம் ஆண்டிற்கு இந்நகராட்சிக்குட்பட்ட நீர்வடி நிலையத்தில் சுத்தம் செய்ய பயன்படுத்தப்படும் ஆலம் 10 டன் விநியோகம் செய்யும் பணி** | **ரூ.2,50,000/–** | M/s.Shri Satya Dyes and Chemicals Aundipatti | ரூ.2,49,200/- |
| | | | M/s.People Chemical Industries, Aundipatti | ரூ.2,50,000/- |

**அலுவலகக்குறிப்பு** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s.Shri Satya Dyes and Chemicals Aundipatti நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொண்டு வேலை உத்தரவு வழங்கவும் மற்றும் பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1001/2022/இ1)
**தீர்மான எண் :** 70– அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ **<u>பொருள் எண்–9</u>**

போடிநாயக்கனூர் நகராட்சியில் பொதுநிதியின் கீழ், நகர்மன்ற தீர்மான ஒப்புதலின் படி கீழ்காணும் பணிக்கு **31.05.2022**ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளிலும் உள்ள பாதாள சாக்கடை குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை அகற்றும் பணி (ஒரு வருடத்திற்கு) | ரூ.6,00,000/– | திரு. L.எல்லப்பன், ஒப்பந்தகாரர் , போடிநாயக்கனூர். | 0.01% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு. P.நடராஜன், ஒப்பந்தகாரர் , போடிநாயக்கனூர். | 1.00% மதிப்பீட்டை விட கூடுதல் |

**அலுவலகக்குறிப்பு** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட **0.01%** குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.L.எல்லப்பன், ஒப்பந்தகாரர், போடிநாயக்கனூர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொண்டு வேலை உத்தரவு வழங்கவும் மற்றும் பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வமங்கலாம்.

(ந.க.எண். 0884 /2022/இ1)
**தீர்மான எண் :** 71– அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ <u>பொருள் எண்–10</u>

போடிநாயக்கனூர் நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் கீழ்காணும் வாகனங்களின் வாகன காப்பீடு உரிமம் 18.06.2022–ம் தேதியுடன் முடிவடைவதால், வாகன காப்பீட்டு உரிமத்தினை மேலும் ஓராண்டு நீட்டித்துக்கொள்ள National Insurance Company Limited,Bodinayakanur நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற கேட்பு தொகையினை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வாகன விபரம் | வாகன எண் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | TATA ACE | TN60-AX-9942 | ரூ.22,477/– |
| 2 | JET RODDING | TN60-AX-9925 | ரூ.66,962/– |

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 1178/2022/இ1)

**தீர்மான எண் : 72–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ <u>பொருள் எண்–11</u>

போடிநாயக்கனூர் நகராட்சியில் பொதுநிதியின் கீழ், நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று கீழ்காணும் பணிக்கு 28.06.2022ம் தேதி குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சி புதுகாலனி 2,3 வது தெருவில் புதுகாலனி 1 வது தெரு பாதாள சாக்கடை அமைக்கும் பணி | ரூ.10,00,000/– | M/S.KMC ASSOCIATES, தேனி. | 0.05% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு. முரளிதரன், தேனி. | 1.08% மதிப்பீட்டை விட கூடுதல் |

**அலுவலகக்குறிப்பு** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட **0.05%** குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/S.KMC ASSOCIATES,தேனி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொண்டு வேலை உத்தரவு வழங்கவும் மற்றும் பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1547/2022/இ1)
**தீர்மான எண் :** 73– அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ <u>**பொருள் எண்–12**</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் எண் **5990/2022/SBM** ,நாள்.**11.04.2022**ன் படி , Swachh Bharat Mission (Urban) 2.0ன் கீழ், போடிநாயக்கனூர் நகராட்சிக்கு பொதுக்கழிப்பிடம் ரூ.**36.28** இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு மேற்காணும் பணிக்கு **31.05.2022**ம் ஒப்பந்தப்புள்ளி முதல் முறையாக கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சி பேருந்து நிலையம் உட்புறம் பொதுகழிப்பிடம் கட்டும் பணி | ரூ.36,28,000/– | M/S.KMC ASSOCIATES,தேனி. | மதிப்பீட்டை விட (4.98%) கூடுதல் |
| | | | திரு. முரளிதரன், தேனி. | மதிப்பீட்டை விட (6.50%) கூடுதல் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட கூடுதலாக வரப்பெற்றுள்ளது. அவற்றில் குறைவாக வழங்கியுள்ள M/S.KMC ASSOCIATES,தேனி நிறுவனத்தின் விலைவிகிதத்தினை குறைத்து தருமாறு **02.06.2022**ம் தேதி பேரப்பேச்சு நடத்தியதில் சந்தையில் கட்டுமான பொருட்களில் விலை மதிப்பீட்டை விட கூடுதலாக இருப்பதாலும், மின்சாதன பொருட்களின் விலை மேலும் உயர வாய்ப்பு இருப்பதாலும், பணியாளர் சம்பளம் தரக்கட்டுப்பாட்டு விலை விபர அட்டவணையை விட கூடுதலாக இருப்பதாலும் விலையை குறைக்க இயலாது என கடிதம் அனுப்பியுள்ளார்.

**அலுவலகக்குறிப்பு** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட கூடுதலாக வரப்பெற்றுள்ளது. மேற்படி பணிக்கு கோரிய ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பு ஒப்பந்தப்புள்ளியாக இருப்பதால் இதில் மதிப்பீட்டைவிட கூடுதலாக வரப்பெற்றதில் குறைவாக வழங்கியுள்ள M/S.KMC ASSOCIATES,தேனி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றும், மேலும் இப்பணிக்காக கூடுதல் செலவினத்தொகையை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1172 /2022/இ1)
**தீர்மான எண் :** 74– அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ <u>**பொருள் எண்–13**</u>

போடிநாயக்கனூர் நகராட்சி அலுவலகம் ,ஆணையாளர் குடியிருப்பு மற்றும் சாலை காளியம்மன் கோவில் கழிவு நீர் உப உந்து நிலையம் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ள கண்காணிப்பு கேமார ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.32,800/– செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1626/2022/இ1)
**தீர்மான எண் :** 75– அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ <u>**பொருள் எண்–14**</u>

போடிநாயக்கனூர் நகராட்சி அலுவலகத்தில் கூடுதலாக 3 கண்காணிப்பு கேமரா பொருத்தவும், பழுதடைந்த 2 கேமராக்களை மாற்றி புதிதாக பொருத்தவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.26,050/– செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1626/2022/இ1)
**தீர்மான எண் :** 76– அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ <u>பொருள் எண்–15</u>

போடிநாயக்கனூர் நகராட்சியில் பழைய ஆட்டி மனையை இடித்துவிட்டு ரூ.**35.00/–** இலட்சம் மதிப்பீட்டில் புதிய கடைகள் கட்டுவதற்கு இவ்வலுவலக ந.க.எண்.**9865/2011/**இ**1** நாள்.**01.04.2013** ன் படி M/s சிஸ்கோ உற்பத்தி மற்றும் பொறியியல் தொழிற்கூட்டுறவு சங்கம், குன்றகுடி, சிவகங்கை மாவட்டம் நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டு நான்கு பகுதி பட்டியல் வழங்கிய நிலையில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண். WA (MD) No.609/2020 வழங்கப்பட்ட **13.07.2021**ம் தேதிய தீர்ப்பின் படி ஐந்தாம் மற்றும் இறுதி பட்டியல் தொகை முழுவதும் வழங்கப்பட்டுள்ளது. திரு.சிவானந்தம் அவர்கள் மேற்படி பணிக்கு வழங்கிய இறுதி பட்டியல் தொகைக்கு **2016**ஆம் ஆண்டு முதல் **2021** ஆம் ஆண்டு வரை வட்டித்தொகை வழங்க கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு **(**W.P.(MD).No 7124 of 2022 )மேற்படி வழக்கின் பேரில் நகராட்சி சார்பாக ஆஜராகி நீதிமன்றத்தில் வழக்கை நடத்துவதற்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.**9,500/–** ஐ வழங்ககோரி அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு. D.சாதிக்ராஜா அவர்களிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. அதன் பேரில் மேற்படி வழக்கறிஞர் கட்டணம் ரூ.**9,500/–** னை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.0965/2022/இ1)**

**தீர்மான எண் : 77–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ <u>பொருள் எண்–16</u>

**15**வது நிதிக்குழு மான்யம் (UnTied) 2020-21ன் கீழ் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.**25.50/–**இலட்சம் மதிப்பீட்டில் **38** இடங்களில் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று தொழில்நுட்ப அனுமதி கோரியமைக்கும் ,பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3340/2022/இ1)**

**தீர்மான எண் : 78–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ <u>**பொருள் எண்–17**</u>

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் **12.05.2022ம்** தேதிய கள ஆய்வு அறிவுரையின்படி, இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வீடுதோறும் சேகரமாகும் மக்கும் குப்பைகளை தனியாக பெறப்பட்டு உரம் தயாரிக்கும் பணி நடைபெற்றுவரும் நான்கு பசுமை நுண் உரக்குடில்களில் (MCC), Electronic Weighing Scale வாங்கி பயன்படுத்துமாறு அறிவுறுத்தியதால், 5 எண்ணம் Electronic Weighing Scale வாங்கவும் ,அதற்கான உத்தேச செலவினம் ரூ.55,000/–னை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.1283/2022/எச்1)**

**தீர்மான எண் : 79–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ <u>**பொருள் எண்–18**</u>

இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் கொசு தடுப்புப்பணிகளுக்காக Verticle Mounted Fogging Machine (1 எண்ணம்), சிறிய அளவிலான Outdoor Fogging Machine (2 எண்ணம்), Indoor Fogging Machine(4எண்ணம்) விநியோகம் செய்யும் பணிக்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று **15.06.2022ம்** தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பதபுள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சி ,கொசு தடுப்புப் பணிகளுக்காக Verticle Mounted Fogging Machine (1 எண்ணம்), சிறிய அளவிலான Outdoor Fogging Machine (2 எண்ணம்), Indoor Fogging Machine(4எண்ணம்) விநியோகம் செய்யும் பணி. | ரூ.7,00,000/– | S.N. ENTERPRISES, CHENNAI | 6,99,600/– |
| | | | SYSTEMS ENGINEERING, CHENNAI | 6,95,280/– |

**அலுவலககுறிப்பு**

பொதுசுகாதார அவசர அவசியம் கருதி **10.05.2022**ஆம் தேதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கும், வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள SYSTEMS ENGINEERING,CHENNAI நிறுவனத்திற்கு, விநியோக உத்தரவு வழங்கவும், மேற்கண்ட பணிக்கு செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1072/2022/எச்1)

**தீர்மான எண் : 80–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ **பொருள் எண்–19**

இந்நகராட்சியில் உள்ள **33** வார்டுகளில் உள்ள அனைத்து வீடுகளிலும் நாள்தோறும் நேரடியாக திடக்கழிவுகள் பெறப்படுகிறது. திடக்கழிவு மேலாண்மை விதிகள் **2016** விதி **4**ன் படி திடக்கழிவுகளை உற்பத்தி செய்பவர் கழிவுகளை உலர் கழிவுகளாகவும், ஈரக்கழிவுகளைத் தனித்தனியாக பிரித்து சேகரித்து தூய்மைப் பணியாளரிடம் வழங்க வேண்டும். ஆனால் நமது நகராட்சி பகுதியில் தூய்மை இந்தியா திட்ட பரப்புரையாளர்கள் மூலமாக பரப்புரை மேற்கொண்ட பின்பும், பொதுமக்கள் சிலர் கழிவுகளை முறையாகப் பிரித்து கொடுக்காமல் மொத்தமாக வழங்கி வருகின்றனர்.எனவே கழிவுகளை முறையாக பிரித்து கொடுக்காத நபர்களுக்கு ரூ.**100/–** அபராதம் விதிக்கவும், இது குறித்து வீடு தோறும் பொதுமக்களுக்கு அறிவிப்பு வழங்கவும், இதற்காக **21,000** நோட்டீசுகள் அச்சடிக்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.**25,000/–** னை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 1627/2022/எச்1)

**தீர்மான எண் : 81–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ **<u>பொருள் எண்–20</u>**

இந்நகராட்சிக்கு பொதுசுகாதாரபிரிவிற்கு அனுமதிக்கப்பட்ட 146 நிரந்தர தூய்மை பணியாளர் பணியிடத்தில் 41 நிரந்தர தூய்மை பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அரசாணை எண் 101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,நாள்.30.04.1997ன் படி இந்நகராட்சிக்கு தேவையான தூய்மை பணியாளர் அளவுகோலின்படி 270 பணியிடங்கள் ஆகும் என்பதால் , திடக்கழிவு மேலாண்மைத்திட்டத்தின் கீழ் பொதுசுகாதாரப்பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடம் உரிய நிர்வாக அனுமதி பெறப்பட்டு 174 (54+50+70) தூய்மை பணியாளர்களை தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு வந்த நிலையில், ஒப்பந்தகாலம் 30.06.2022ல் முடிவடைவதாலும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 18.06.2022 நேரடி ஆய்வுக்கூட்ட அறிவுரையில், திடக்கழிவு மேலாண்மைத்திட்டத்தின் கீழ் தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் 174 தூய்மை பணியாளர்களை மேலும் ஒராண்டுக்கு நீட்டித்து பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் படி, அவர்லேண்ட் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் பிரைவேட் லிமிடேட் ,சென்னை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் 174 தூய்மை பணியாளர்களை 01.07.2022 முதல் 30.06.2023 வரை மேலும் ஒராண்டுக்கு நீட்டிப்பு அல்லது புதிய ஒப்பந்தப்புள்ளி கோருவது இதில் எது முந்தியதோ அது வரை பொதுசுகாதாரப்பணி மேற்கொள்ள பணி நீடித்து உத்தரவு வழங்கவும். மேலும் அதற்கான ஊதிய செலவினம் (Pay+ESI, EPF, Life Insurance, Uniforms and Safety equipments etc+ Service Tax + Administrative Charges)உட்பட மாதம் ஒன்றுக்கு ரூ.30.00/–லட்சத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் உரிய பின்னேற்பு பெறவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.1283/2022/எச்1)**

**தீர்மான எண் :82–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ **<u>பொருள் எண்–21</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் **18.06.2022**ம் தேதிய நேரடி ஆய்வில் தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் **60** DBC (Domestic Breeding Checker) பணியாளர்கள் எண்ணிக்கையினை **20** நபர்களாக குறைக்கவும் அதற்கு பதிலாக திடக்கழிவு மேலாண்மை பணிக்கு **25** தூய்மைப் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனம் மூலம் பணியமர்த்தவும் அறிவுரை வழங்கப்பட்டது.

அதன் படி, தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் **60** DBC (Domestic Breeding Checker ) பணியாளர்களின் பணி ஒப்பந்தகாலம் **30.06.2022**ல் முடிவடைவதாலும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் **18.06.2022**ம் தேதிய அறிவுரையின் படியும் **01.07.2022** முதல் **30.06.2023** வரை **20** DBC ( Domestic Breeding Checker ) பணியாளர்களை பணியமர்த்த அவர்லேண்ட் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் பிரைவேட் லிமிடேட் ,சென்னை நிறுவனத்தின் ஒப்பந்த காலத்தை ஓராண்டுக்கு நீட்டிப்பு செய்தும் அல்லது புதிய ஒப்பந்தப்புள்ளி கோருவது இதில் எது முந்தியதோ அது வரை பணி மேற்கொள்ள பணி நீடித்து உத்தரவு வழங்கவும். மேலும் அதற்கான உத்தேச செலவினம் (Pay+ ESI, EPF, Life Insurance, Uniforms etc+ Service Tax + AdministrativeCharges)உட்பட மாதம் ஒன்றுக்கு ரூ.**2.06/–**லட்சத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் , மழை காலங்களில் டெங்கு காய்ச்சல் அதிகம் பரவாமல் கட்டுபடுத்த DBC பணியாளர்களை தேவைப்படும் எண்ணிக்கையில், தேவைப்படும் நாட்களுக்கு தற்காலிகமாக கூடுதலாக ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தவும் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு **25** தூய்மைப் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனம் மூலம் பணியமர்த்தவும் அதற்கான உத்தேச செலவின(Pay+ESI, EPF, Life Insurance, Uniforms and Safety equipments etc+ Service Tax + Administrative Charges) உட்பட மாதம் ஒன்றுக்கு ரூ.**4.08/–**லட்சத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 1594 /2022/எச்1)

**தீர்மான எண் : 83–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ **<u>பொருள் எண்–22</u>**

போடிநாயக்கனூர் நகராட்சியில் பொதுசுகாதா பிரிவில் இயங்கி வரும் TN60 S 2049 TATA ACE வாகனத்தின் தகுதி சான்று ஏப்ரல் **2022** உடன் முடிவடைந்துவிட்டதால் வாகனத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்வதற்கு அதற்கான உத்தேச செலவினம் ரூ.**1,15,000/–**னை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1284/2022/எச்1)

**தீர்மான எண் :** 84– அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ **<u>பொருள் எண்–23</u>**

மனுதாரார் திரு.M.அப்துர்ரஹ்மான், திரு.S.நிஜாத்ரஹ்மான், என்பவர் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட, சர்வே வார்டு **–2**, பிளாக் எண்**–4**, நகரளவு எண்**–184/19** –ல் கட்டுப்பட்டுள்ள **0.465** ஏக்கர் பரப்பளவுள்ள அளவுள்ள இடத்தினை குடியிருப்பு பயன்பாட்டிற்கான நில உபயோகமாக உத்தேசித்துள்ளதாகவும், மேற்படி நிலமானது அங்கீகரிக்கப்பட்ட முழுமைத் திட்டத்தில் விவசாயப் பயன்பாட்டிற்கான நில உபயோகத்தில் அமைந்துள்ளதால், அதனை குடியிருப்பு பயன்பாட்டிற்கான நில உபயோகமாக மாற்றம் செய்ய கோரி **28.12.2021** ஆம் தேதிய விண்ணப்பம் வரப்பெற்றதை பொதுமக்களிடமிருந்து நிலஉபயோகம் மாற்றம் செய்வது தொடர்பாக ஆலோசணைகள் மற்றும் ஆட்சேபணைகள் பெரும் பொருட்டு செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் தேனி அவர்களின் வழி தமிழ் நாளிதழிலும் மற்றும் ஆங்கில நாளிதழிலும் விளம்பரம் செய்வதற்கும், **30** தினங்களில் பொது மக்கள் தங்களது ஆலோசனைகள், ஆட்சேபனைகளை தெரிவிக்கும் பொருட்டும்,விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** மனுதாரின் **0.465** ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தினை அங்கீகரிக்கப்பட்ட முழுமைத் திட்டத்தில் விவசாய நில உபயோகத்தில் அமைந்துள்ளது.. மேற்படி இடத்தில் எவ்வித விவசாயமும் செய்யப்படாமல் தரிசாக உள்ளது. எனவே,

விவசாய நில உபயோகத்திலிருந்து குடியிருப்பு பயன்பாட்டிற்கான நில உபயோகமாக மாற்றம் செய்ய பொது மக்கள் தங்களது ஆலோசனைகள், ஆட்சேபனைகளைத் தெரிவிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3859/2021/எப்1)

**தீர்மான எண் : 85–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ **பொருள் எண்–24**

மனுதாரர் திரு.M.அப்துர்ரஹ்மான், திரு.S.நிஜாத்ரஹ்மான், என்பவர் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட, சர்வே வார்டு **–2**, பிளாக் எண்**–4**, நகரளவு எண்**–184–2B1**–ல் கட்டுப்பட்டுள்ள **0.57** ஏக்கர் பரப்பளவுள்ள அளவுள்ள இடத்தினை குடியிருப்பு பயன்பாட்டிற்கான நில உபயோகமாக உத்தேசித்துள்ளதாகவும், மேற்படி நிலமானது அங்கீகரிக்கப்பட்ட முழுமைத் திட்டத்தில் விவசாயப் பயன்பாட்டிற்கான நில உபயோகத்தில் அமைந்துள்ளதால், அதனை குடியிருப்பு பயன்பாட்டிற்கான நில உபயோகமாக மாற்றம் செய்ய கோரி **28.12.2021** ஆம் தேதிய விண்ணப்பம் வரப்பெற்றதை பொதுமக்களிடமிருந்து நிலஉபயோகம் மாற்றம் செய்வது தொடர்பாக ஆலோசணைகள் மற்றும் ஆட்சேபணைகள் பெரும் பொருட்டு செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் தேனி அவர்களின் வழி தமிழ் நாளிதழிலும் மற்றும் ஆங்கில நாளிதழிலும் விளம்பரம் செய்வதற்கும், **30** தினங்களில் பொது மக்கள் தங்களது ஆலோசனைகள், ஆட்சேபனைகளை தெரிவிக்கும் பொருட்டும்,விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** மனுதாரின் **0.57** ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தினை அங்கீகரிக்கப்பட்ட முழுமைத் திட்டத்தில் விவசாய நில உபயோகத்தில் அமைந்துள்ளது.. மேற்படி இடத்தில் எவ்வித விவசாயமும் செய்யப்படாமல் தரிசாக உள்ளது. எனவே, விவசாய நில உபயோகத்திலிருந்து குடியிருப்பு

பயன்பாட்டிற்கான நில உபயோகமாக மாற்றம் செய்ய பொது மக்கள் தங்களது ஆலோசனைகள், ஆட்சேபனைகளைத் தெரிவிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண்.0608/2022/எப்1)

**தீர்மான எண் : 86–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ **பொருள் எண்–25**

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் நகராட்சி, வார்டு –B, பிளாக்–4, நகரளவை எண்கள்.187/1 இல் 4 ஏக்கர் 02செண்ட் பரப்பளவு இடத்தினை அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தில் விவசாய உபயோக பகுதியிலிருந்து பொது குடியிருப்பு உபயோக பகுதியாக நிலப்பயன்பாடு மாற்றம் செய்ய திரு.ஓ.சின்னன்னன் மற்றும் R.பாலமுருகன் மூலம் நாளிதழில் பிரசுரம் செய்ய விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. அதன் பேரில் மாவட்ட மக்கள் செய்தி அலுவலர் அவர்களுக்கு 18.05.2022 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. மேலும் 20.05.2022ல் மதுரைமணி தமிழ் நாளிதழிலும் , Tricity mirror என்ற ஆங்கில நாளிதழிலும் செய்தி வெளியிடப்பட்டது. இந்நாள் வரை மேலே குறிப்பிட்டுள்ள சர்வே எண்களுக்கு ஆட்சேபனை ஏதும் பொது மக்களிடம் இருந்து 30 நாட்களுக்குள் இவ்வலுவலகத்திற்கு ஏதும் பெறப்படவில்லை. எனவே மேற்படி சர்வே எண்கள் அமைந்துள்ள இடத்தினை அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தில் விவசாய நில உபயோகத்திலிருந்து குடியிருப்பு உபயோகமாக மாற்றம் செய்ய உதவி இய்க்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தேனி அவர்களுக்கு கடிதம் அனுப்ப மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு**

மனுதாரரின் 4 ஏக்கர் 02 செண்ட் இடத்தினை அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தில் விவசாய நில உபயோகத்திலிருந்து குடியிருப்பு உபயோகமாக மாற்றம் செய்ய தினசரி நாளிதள்களில் செய்தி வெளியிடப்பட்டது, இந்நாள் வரை சர்வே வார்டு –B, பிளாக்–4, நகரளவை

எண்கள்.187/1 இல் 4 ஏக்கர் 02செண்ட் பரப்பளவிற்கு எவ்வித ஆட்சேபனை ஏதும் பொது மக்களிடம் இருந்து 30 நாட்களுக்குள் இவ்வலுவலகத்திற்கு ஏதும் பெறப்படவில்லை. எனவே மேற்படி சர்வே எண்கள் அமைந்துள்ள இடத்தினை அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தில் விவசாய நில உபயோகத்திலிருந்து குடியிருப்பு உபயோகமாக மாற்றம் செய்ய உதவி இய்க்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தேனி அவர்களுக்கு கடிதம் அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண். 0608/2022/எப்–1)

**தீர்மான எண் : 87–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

(ஒம்) திருமதி.ச.ராஜராஜேஸ்வரி
நகர்மன்ற தலைவர்

// உண்மைநகல் //

ஆணையாளார்(பொ)
போடிநாயக்கனூர் நகராட்சி